## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம்

---

*[1984, ஓகத்து மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


**1984, ஓகத்து மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 60

## 1984 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம்

[1984, ஒகத்து மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 42/84
1663

**1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**381 ஆம் அத்தியாயத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "நியமன நாளன்று பிற்பகல் ஒரு மணிக்கும்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "நியமன நாளன்று காலை பதினொரு மணிக்கும்" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்.

28அ. (1) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய தேர்தலொன்றை நடாத்துமாறு கட்டளை விடுக்கும் அறிவித்தலின் தேதிக்கு முந்திய நாளன்று 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையதாகவிருக்கும் ஓர் அரசியற் கட்சியானது இக்கட்டளையின்கீழான தேர்தல்களின் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(2) தேர்தல்களின் நோக்கங்களுக்காக, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறையிலிருப்பதன் பயனாக ஓர் அரசியற் கட்சி அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்பட உரித்துடையதாகவுள்ளவிடத்து, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் அத்தகைய கட்சிக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமானது, 28ஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இக்கட்டளையின்கீழ் அக்கட்சிக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

2—எ 078480—3,250 (08/84)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், " நியமனநாளன்று பிற்பகல் ஒரு மணிக்கும் " என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, " நியமன நாளன்று காலை பதினொரு மணிக்கும் " என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 34அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அப்புதிய பிரிவு அச்சட்டவாக்கத்தின் 34அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வேட்பாளர்கள் எவரும் நியமிக்கப்பட்டிராவிடின் புதிய நியமன நாள் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

34அ. எதேனும் தேர்தல் மாவட்டத்தில் நியமனநாளன்று—

(அ) அன்றைய நாள் காலை பதினொரு மணி வரை தெரிவத்தாட்சி அலுவலரால் நியமனப் பத்திரங்கள் எவையும் பெற்றுக்கொள்ளப்படவில்லை ; அல்லது

(ஆ) அன்றைய நாள் காலை பதினொரு மணி வரை தெரிவத்தாட்சி அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா நியமனப்பத்திரங்களும் அவரால் நிராகரிக்கப்பட்டன,

என்ற நிகழ்வின் காரணத்தினால் அம்மாவட்டத்திற்கு வேட்பாளர் எவரும் நியமிக்கப்பட்டிராவிடில், தெரிவத்தாட்சி அலுவலர் ஆணையாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் ; ஆணையாளர் அத்தேர்தல் தொடர்பில் எல்லா நடவடிக்கைகளையும் புதிதாகத் தொடங்குதல் வேண்டும் அல்லது தொடக்குவித்தல் வேண்டும் ; ஆயினும், அத்தேர்தலுக்குக் குறித்துரைக்கப்பட வேண்டிய நியமன நாள் அத்தேர்தலுக்கென குறித்துரைக்கப்பட்ட கடைசி நியமன நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு முந்தாமலும் அறுபது நாட்களுக்குப் பிந்தாமலும் இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (3) ஆணையாளர், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் வேறு எதேனும் மணித்தியாலத்தை நியமித்தாலன்றி, எதேனும் தேர்தல் மாவட்டத்திலான வாக்கெடுப்பு 35 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நாளன்று முற்பகல் ஏழு மணிக்குத் தொடங்குதல் வேண்டும் என்பதுடன், அதே நாளில் பிற்பகல் நான்கு மணிக்கு முடிவடைதலும் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இப் பிரிவு அச்சட்டவாக்கத்தின் 47அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 47அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"வாக்கெடுப்பு நிலையங்களில் குழப்பங்கள். 47அ. (1) பின்வரும் தன்மையிலான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதன் காரணமாக அதாவது—

(அ) வாக்கெடுப்பு தொடங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பைத் தொடக்க முடியாதிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பைத் தொடக்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்புத் தொடங்கி ஆனால் வாக்கெடுப்பு முடிவுடைவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரம்வரை வாக்கெடுப்பைத் தொடர்ந்து நடாத்த முடியாதிருக்குமிடத்து ; அல்லது

(இ) வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்குப்பெட்டிகள் எவற்றையும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்க முடியாதிருக்குமிடத்து,

அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமை தாங்கும் அலுவலர் உடனடியாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும் ; தெரிவத்தாட்சி அலுவலர் அதனையடுத்து ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) தேர்தல் மாவட்டமொன்றிலான ஒரு வாக்கெடுப்பு நிலையம் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் தகவலொன்று கிடைக்கப்பெற்றதன் மீது ஆணையாளர், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளை அல்லது அளிக்கப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத்தவறியதால் அத்தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தல் முடிவு பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என அபிப்பிராயப்படுவாராயின், அவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்திலான வாக்கெடுப்பு வறிதானதென வெளிப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் புதிதாக வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கான

தேதியொன்றை நியமித்தலும் வேண்டும். அவ்விதம் நிர்ணயிக்கப்படும் தேதியானது, அந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பான தகவலை அவர் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்கு முந்தாமலும் நான்கு வாரங்களுக்குப் பிந்தாமலும் இருத்தல் வேண்டும். ஆணையாளர் தேசிய மொழிகளுள் ஒவ்வொன்றிலுமான ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலாவது அத்துடன் அத்தகைய வாக்கெடுப்பு மாவட்டத்துள் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கப்படும் அறிவித்தல்கள் மூலமும் வாக்கெடுப்பின் புதிய தேதிபற்றிய அறிவித்தலைக் கொடுத்தல்வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றி நடாத்தப்படும் வாக்கெடுப்பொன்றில் வாக்கெடுப்பிற்கும் வாக்கெடுப்பு தொடர்பாகவும், அத்துடன் வாக்கெண்ணுதலுக்கும் வாக்கெண்ணுதல் தொடர்பாகவும் 36, 37, 39, 40, 41, 42, 43, 43அ, 44, 45, 46, 47, 48 என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அந்த வாக்கெடுப்பின்போது பயன்படுத்தப்பட வேண்டிய வாக்காளர் இடாப்பானது முந்திய வாக்கெடுப்பின்போது பயன்படுத்தப்பட்ட அதே வாக்காளர் இடாப்பாக இருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றி நடாத்தப்படும் வாக்கெடுப்பொன்றுக்கு 52அஅ, 52ஆ, 56 (2) என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கங்களுக்காக அப்பிரிவுகளில் "அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடாத்தப்படும் தேதியை அடுத்துவரும் நாள்" என்பதனைப் பற்றிய குறிப்பீடுகள் அத்தகைய வாக்கெடுப்பை நடாத்துவதற்காக அக்கட்டளையினால் நிர்ணயிக்கப்பட்ட தேதியை அடுத்துவரும் நாளைப் பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றி நடாத்தப்படும் வாக்கெடுப்பொன்றில் வாக்களித்தமை காரணமாக தேர்தலொன்றில் ஒரு முறைக்குக் கூடுதலாக வாக்களிக்கும் ஆளொருவர் இக்கட்டளையின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடன டுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இப்புதிய பிரிவு அச்சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வாக்கெடுப்பு குழப்பப்படுமிடத்துத் தேர்தலில் வாக்குகளை எண்ணுதல்

48அ. (1) ஆணையாளர், தேர்தல் மாவட்ட மொன்றிலான வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பாக 47அ (1) என்னும் பிரிவின்கீழ் தகவலொன்றைப் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து அத்தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணுதலானது, எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் அத் தகைய தகவல் பெறப்பட்டுள்ளதோ அந்த வாக் கெடுப்பு நிலையத்திலிருந்துவரும் வாக்குச் சீட்டுப்பெட்டிகளைத் தவிர அத்தேர்தல் மாவட் டம் தொடர்பான மற்ற எல்லா வாக்குச்சீட்டுப் பெட்டிகளையும் தெரிவத்தாட்சி அலுவலர் பெற் றுக்கொண்ட பின்னர் தொடங்குதல்வேண்டும். தேர்தலொன்றில் வாக்குகளை எண்ணுதல் தொடர்பான இக்கட்டளையின் ஏற்பாடுகள், தெரி வத்தாட்சி அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குச் சீட்டுப் பெட்டிகளிலுள்ள வாக்குகளை எண்ணுதலுக்கு ஏற்புடையனவாதல் வேண் டும். தெரிவத்தாட்சி அலுவலர் வாக்குச் சீட்டுப் பெட்டிகளிலுள்ள வாக்குகளை எண்ணுதல் வேண் டும் என்பதுடன், ஒவ்வொரு வேட்பாளராலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைப் பதி தலும் வேண்டும்.

(2) வாக்கெண்ணுதல் எந்தத்தேர்தல் மாவட் டம் தொடர்பானதோ அந்தத் தேர்தல் மாவட் டத்திலுள்ள ஏதேனும் வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் ஆணையாளர் 47அ (2) என்னும் பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்கவில்லையா யின், அவர், (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க இடம் பெற்ற வாக்கெண்ணுதலில் ஆகக்கூடிய எண் ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றுள்ள வேட் பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப் படுத்துமாறு தெரிவத்தாட்சி அலுவலரைப் பணித்தல் வேண்டும்.

(3) வாக்கெண்ணுதல் எந்தத்தேர்தல் மாவட் டம் தொடர்பானதோ அந்தத் தேர்தல் மா வட்டத்திலுள்ள ஏதேனும் வாக்கெடுப்பு நிலை யம் தொடர்பில் ஆணையாளர் 47அ (2) என்னும் பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவாராயின், தெரிவத்தாட்சி அலுவலர் (1) ஆம் உட்பிரிவிற் கிணங்க இடம்பெற்ற வாக்கெண்ணுதலில் ஒவ் வொரு வேட்பாளராலும் பெறப்பட்ட வாக்குகள் 47அ (2) என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட

கட்டளையைப் பின்பற்றி நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் அந்த வேட்பாளரால் பெறப்பட்ட வாக்குகளுடன் சேர்த்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேர்த்தலின் பின்னர் ஆகக்கூடிய எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றிருக்கும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப்படுத்துதலும் வேண்டும்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.